மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆண்டுதோறும் இந்த நிறுவனத்திற்காக மாநில அரசு மானியம் அளித்து வருகிறது. இதைத்தவிர வெளிநாட்டில் சென்று இரண்டு பேராசிரியர்கள் ஒரு 6 மாத காலம், ஓராண்டுக் காலம் பயிற்சி பெறுவதற்கும் யுனஸ்கோ உதவி அளித்து வருகிறது. அந்த நிறுவனத்திற்கு உதவி அளிக்க வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. கட்டடம் கட்டுவதற்காக ரூ. 2,40,000-ஐ இந்திய அரசு மொழி வளர்ச்சிக்காக ஒதுக்கித் தரும் ரூ. 1 கோடியில் ஒதுக்கித் தர வேண்டுமென்றும் மத்திய அரசை இந்த மாநில அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, இந்த இடத்தைத் தேர்ந்தெடுப்பதில் தமிழ் வல்லுநர்கள் யாரேனும் இது சம்பந்தமாக கலந்து ஆலோசிக்கப்பட்டார்களா? சங்கம் வளர்த்த தமிழ் மதுரையம்பதியிலே இதை நிறுவ ஆலோசனை செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதிலே பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் இடம் பெற்று இருக்கிறார்கள். டாக்டர் மு. வரதராசனார் அதனுடைய கௌரவத் தலைவர். இதிலே பேராசிரியர் டி. பி. மீனாட்சிசுந்தரம் போன்றவர்கள் இருந்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இது பன்னாட்டுத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமாக இருப்பதாலும், வெளி நாட்டு வல்லுநர்கள் வந்து ஆராய்ச்சிகள் செய்வதற்கும், பல்கலைக் கழகங்களோடு தொடர்புகொள்வதற்கு சென்னைதான் ஏற்ற இடம் என்று கருதப்படுகிற காரணத்தாலும், பாலிடெக்னிக் காம்பஸ்ஸில் இடம் ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

National Cadet Corps

* 4. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to intensify the National Cadet Corps training in this State; and

(*b*) if so, the details thereof?

1973 ஆகஸ்ட் 4]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தேசிய மாணவர் படைத் தலைமை இயக்குநர் அவ்வப்போது வெளியிடும் (பாடப் பயிற்சி) பாடத் திட்டத்தையொட்டித் தமிழ் நாட்டில் உள்ள மாணவர்களுக்குத் தேசிய மாணவர் படைப் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது. இப் பயிற்சி முழு அளவில் அளிக்கப்படுகிறது.

THIRU N. DENNIS : Sir, may I know whether this will be made compulsory to all college students?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது கட்டாயமாக வைக்கப்படவில்லை. விருப்பமாகத்தான் வைக்கப்பட்டிருக்கிறது. சிலர் நேஷனல் சர்வீஸ் கோரில் சேர்ந் திருக்கிறார்கள். சிலர் என்.சி.சி.யில் சேர்ந்து இருக்கிறார்கள். மற்றும் பலர் கேம்ஸ், ஸ்போர்ட்ஸ் ஆகியவற்றில் சேர்ந்திருக் கிறார்கள். தேசிய மாணவர் பாட (இளைஞர்) படையில் 63,736 பேர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். தேசிய மாணவர் பாட (முதியோர்) படையில் 27,045 பேர்கள் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, இந்த தேசீய மாணவர் படையில் மார்ச் பாஸ்டின் போது லெப்ட் ரைட் என்பதற்குப் பதிலாக இந்தியிலே 'தாயே' 'பாயே' என்று சொல்லி உத்தரவு கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதை மாற்றி, ஒன்று ஆங்கிலத்தில் லெப்ட், ரைட் என்று சொல்லலாம், இல்லாவிட்டால் தமிழில் "இடக்கால், வடக்கால்" என்று சொல்வதற்கு தமிழக அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படி அகில இந்திய ரீதியில் அதனுடைய ஆணை இருக்கவேண்டுமென்று சொல்லிய காரணத்தால்தான், தமிழ் நாட்டில் அந்த என்.சி.சி. பயிற்சி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. பிறகு மத்திய அரசோடு தொடர்புகொண்டு, ஆங்கிலத்தில் ஆணைச் சொற்கள் சொல்லலாம் என்ற நிலைமையேற்பட்டதால், 3 ஆண்டுக் காலமாக அது இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஆங்கிலத்தில் ஆணைச் சொற்கள் இருக்கலாம் என்று இருக்கிறது. அது வழக்கில் செயல்படுத்தப்பட்டும் வருகிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, இந்த மாணவர் படையில் பயிற்சி பெற்றவர்களுக்குக் கல்லூரி பாடத்தில், பரீட்சையில், 3-வது பிரிவில் ஒரு பாடத்தை விடுவது என்ற உரிமை இருந்தது. அந்த நிலைமை தொடர்ந்து இருக்கிறதா? மேலும் மிலிடரி சயன்ஸ் பகுதியிலே அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, சோதனை நடத்தப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இதுபற்றி விவரக் குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போட்டால் அதைக் கேட்டறிந்து சொல்லலாம். இதில் பயிற்சி பெற்றவர்கள் மேல் படிப்புக்குச் செல்கிறபோது, அது கருத்தில் கொள்ளப்பட்டு அதற்காகத் தனிச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. பாடமோ, அல்லது மற்றவைகளைப் பொறுத்தோ தனிக்கேள்வி போட்டால் விவரம் அறிந்து சொல்லலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, ஆணை ஆங்கிலத்தில் இருக்கவேண்டுமென்று அரசு உத்தரவு போட்டு இருக்கிறது. அதையும் மீறி எங்காவது இந்தியில் ஆணைச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன என்று அரசுக்குப் புகார் கொண்டுவரப்பட்டிருக்கிறதா? அப்படிப் புகார் வந்திருந்தால் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தமிழகத்தைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட புகார் வரவில்லை. ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டு மொழிகளிலும் ஆணைச்சொற்கள் சொல்லலாம் என்று இருந்தது. பிறகு இந்தியில்தான் இருக்க வேண்டுமென்று சொல்லியதால் அதை நிறுத்திவைத்திருந்தோம். பிறகு தமிழக அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க, தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஆணைச் சொற்கள் ஆங்கிலத்தில் இருக்கலாம் என்று கூறிவிட்டார்கள். இப்போது ஆங்கிலத்தில்தான் ஆணைச் சொற்கள் கூறப்படுகின்றன. இதுகுறித்துப் புகார் எதும் வரவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Is the Government giving any preference to the N.C.C. candidates in the matter of recruitment to jobs, particularly for the jobs in Police Department?

1973 ஆகஸ்ட் 4]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, என்.ஸி.ஸி-யில் சேர்ந்து பயிற்சி பெற்றவர்களுக்கு ஓரளவுக்குச் சலுகை இருக்கிறது என்று நான் கருதுகிறேன். காவல் துறையில் எடுக்கும்பொழுது எந்த அளவிலே சலுகை இருக்கிறது என்று கூறுவதற்கு இயலாது. ஆனால், தொழிற்கல்வி நிலையங்களில் சேர்த்துக்கொள்ளப்படும்பொழுது, மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றையக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படும்பொழுது என்.ஸி.ஸி-யில் எடுக்கப்பட்டுள்ள மதிப்பெண்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டுத்தான் சலுகை அளிக்கப்படுகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : இந்த தேசிய மாணவர் படையை பல சமுதாயப் பணிகளில் பயன்படுத்திக்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு ஏதாவது உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சமுதாயப் பணிக்கு என்று ஒவ்வொரு கல்லூரியிலும் என்.எஸ்.எஸ்.சி. நாஷனல் சோஷியல் சர்வீஸ் கோர் என்ற அளவுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பல்வேறு வகைகளில் சிற்றூர்கள் மற்ற இடங்களுக்குச் சென்று சமுதாயப் பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள். தேசிய மாணவர் படை மற்றையச் சமுதாயப் பணிகளிலே ஈடுபடுகின்ற தன்மைகள் இல்லை. ஆனால் ஆங்காங்கு சில சமயங்களில் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குபடுத்துகிற முறை ஏற்படுகிறபொழுது இந்தப் படையினர் உதவி செய்கின்றார்கள்.

முதுநிலை ஆசிரியர் பதவிகள்

*5 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1967 மார்ச்சு முதல் 1972 ஜூலை 31-ம் தேதி வரை எவ்வளவு Higher Grade ஆசிரியர் பதவிகள் Secondary Grade -க்கு உயர்த்தப்பட்டுள்ளன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 24,500 பதவிகள் உயர்த்தப்பட்டுள்ளன.